## பவானி நகராட்சி (ஈரோடு மாவட்டம்) 23.09.2022-ம் தேதி வெள்ளிக்கிழமை நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள் தீர்மானத்தின் உண்மை நகல்

**பொருள் எண்: 1**

பவானி நகராட்சி பொதுசுகாதார பிரிவிற்கு அவ்வப்போது தேவைக்கேற்ப கித்தான் சாக்குப்பைகள் விநியோகம் செய்யும் பணிக்கு ஏற்கனவே இந்நகர்மன்ற தீர்மானம் எண்.22, நாள்: 28.04.2022-ல் அனுமதி வழங்கியுள்ளதன் பேரில் 30.08.2022-ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது..

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளியாளரின் விபரம் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் |
|---|---|---|
| 1 | திரு.எம். முருகேசன்,<br>ஒப்பந்ததாரர், கவுந்தபாடி | ரூ.16/- |
| 2 | திரு.எஸ்.பாலசுப்ரமணியன்,<br>43,பழனிபுரம் 3வது வீதி, பவானி | ரூ.19/- |

குறைவான ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் கொடுத்திட்ட திரு.எம். முருகேசன், ஒப்பந்ததாரர், கவுந்தபாடி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். தேவைக்கேற்ப அவ்வப்போது மேற்படி ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தில் கித்தான் சாக்குப்பைகளை விநியோகம் செய்ய மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**<u>மன்றத்தீர்மான எண் : 105</u>** அனுமதிக்கப்பட்டது (ந.க.எண். 289/2021/எச்1)

**பொருள் எண்: 2**

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு பணிகளுக்கு தேவைக்கேற்ப அவ்வப்போது விளம்பர செலவு, விழிப்புணர்வு விளம்பர பிளக்ஸ் போர்டுகள் அமைத்து விழிப்புணர்வு பணி மேற்கொள்ள ஏற்கனவே இந்நகர்மன்ற தீர்மானம் எண். 16, நாள்: 28.04.2022-ல் அனுமதி வழங்கியுள்ளதன் பேரில் 23.08.2022-ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | ஒப்பந்தப்புள்ளியாளரின் விபரம்/ விலைவிகிதம்<br>1) **மணி டிஜிட்டல் கிராபிக்ஸ்**, 18ஏ, **சரவணா காம்ப்ளக்ஸ்**, **குமாரபாளையம்** | ஒப்பந்தப்புள்ளியாளரின் விபரம்/ விலைவிகிதம்<br>2) **எ.ரவிக்குமார்**, **ப்ளக்ஸ் போர்டு சப்ளையர்**,<br>601, **வர்ணபுரம்** 5**வது வீதி**, **வி.பி.என். பிளாசா**, **பவானி** |
|---|---|---|---|
| 1 | 4 x 4 நான்கு புறமும் ரீப்பர் பிட்டிங் செய்து Flex Board தயார் செய்து சப்ளை செய்யும் பணி. | ரூ.680/- | ரூ.650/- |
| 2. | 4 x 4 நான்கு புறமும் ஸ்டீல் பைப் பிட்டிங் செய்து Flex Board தயார் செய்து சப்ளை செய்யும் பணி. | ரூ.1400/- | ரூ.1300/- |
| 3 | 6 x 4 நான்கு புறமும் ரீப்பர் பிட்டிங் செய்து Flex Board தயார் செய்து சப்ளை செய்யும் பணி. | ரூ.850/- | ரூ.750/- |
| 4 | 6 x 4 நான்கு புறமும் ஸ்டீல் பைப் பிட்டிங் செய்து Flex Board தயார் செய்து சப்ளை | ரூ.1950/- | ரூ.1920/- |

| | | | |
|---|---|---|---|
| | செய்யும் பணி. | | |
| 5 | 8 x 6 நான்கு புறமும் ரீப்பர் பிட்டிங் செய்து Flex Board தயார் செய்து சப்ளை செய்யும் பணி. | ரூ.1250/- | ரூ.1200/- |
| 6 | 8 x 6 நான்கு புறமும் ஸ்டீல் பைப் பிட்டிங் செய்து Flex Board தயார் செய்து சப்ளை செய்யும் பணி. | ரூ.3890/- | ரூ.3840/- |
| 7 | 10 x 12 நான்கு புறமும் ஸ்டீல் பைப் பிட்டிங் செய்து Flex Board தயார் செய்து சப்ளை செய்யும் பணி. | ரூ.9700/- | ரூ.9600/- |
| 8 | 10 x 12 நான்கு புறமும் ரீப்பர் பிட்டிங் செய்து Flex Board தயார் செய்து சப்ளை செய்யும் பணி. | ரூ.2450/- | ரூ.2400/- |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் எ.ரவிக்குமார், ப்ளக்ஸ் போர்டு சப்ளையர், 601, வர்ணபுரம் 5வது வீதி, வி.பி.என். பிளாசா, பவானி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியானது மற்றொன்றை விட குறைவாக உள்ளதால் மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்ற பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண் : 106** அனுமதிக்கப்பட்டது (ந.க.எண்.311/2017/எச்1).

**பொருள் எண்: 3**

இயக்குநர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோவை அவர்களின் கடித ந.க.எண் 471/2022/A2 நாள் 23.08.2022-ன்படி 2022-2023-ம் ஆண்டிற்கான வருடாந்திர பங்களிப்புத் தொகை ரூ.30,000/-யை செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே 2022-2023 ஆண்டிற்கான பங்களிப்புத் தொகை ரூ.30,000/-யை கோயமுத்தூர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மேற்படி பங்களிப்புத் தொகை ரூ.30,000/-யை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண் : 107** அனுமதிக்கப்பட்டது (ந.க.எண்.1005/2019/சி1)

**பொருள் எண்: 4**

பவானி நகராட்சியில் துாய்மை பணியாளராக பணிபுரிந்து இறந்த திரு .பரமசிவம், என்பவரின் மனைவி திருமதி.தங்கமணி, என்பவர் மீது பவானி நகராட்சியின் சார்பில் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தது. சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண் .WP20997/2004 சம்மந்தமாக நகராட்சியின் சார்பில் ஆஜராகும் வழக்கறிஞர் திரு.பி.எஸ்.ஜெயக்குமார், சென்னை அவர்களுக்கு வழக்கறிஞர் கட்டணம் தொகை ரூ . 18000/-ஐ வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு.பி.எஸ்.ஜெயக்குமார், சென்னை அவர்களுக்கு தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**மன்றத்தீர்மான எண் : 108** அனுமதிக்கப்பட்டது ( ந.க.எண். 747/2022/எச்1)

**பொருள் எண்: 5**

மாண்புமிகு நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் அவர்களின் தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்பு 2022-2023 நாள் 07.04.2022 அறிவிப்பு 16-வ் நகரத்தில் காற்றோட்டமான பகுதிகளில் Lung Space அதிகரிக்கும் நடவடிக்கையாக தேக்கித் திட கழிவுகளை Bio mining முறையில் அகற்றி மீடகப்பட்டுள்ள இடத்தில் நகர்புற காடுகளை உருவாக்கப்படும் என அறிவிக்கப்பட்டதின் அடிப்படையில், இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில்

மரங்கள் நடப்பட வேண்டி பரப்பு 1.91. ஏக்கரில் 859 எண்ணிக்கை ரூ.2.48 இலட்சத்திற்கு 15வது மதிதிய நிதிக்குழு மான்யம் Tied Grand 2022-2023ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையில் பணியினை மேற்கொள்ள நகராட்சி நிர்வாகஇயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ந.க.எண் 18276/2022/CFC நாள் 26.08.2022ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியினை மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்று பணிமேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>மன்றத்தீர்மான எண் : 109</u>** அனுமதிக்கப்பட்டது (ந.க.எண். 111/2022/இ1)

**பொருள் எண்: 6**

பவானி நகராட்சி - பொது சுகாதாரம் - இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மற்றும் சுகாதார பணிகள் மேற்கொள்ள அரசாணை நிலை எண்: 101 (ந.நி.கு.வ.துறை), நாள்: 30.04.1997ன் படி இந்நகராட்சிக்கு தேவையான துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை 177 ஆகும். ஆனால், இந்நகராட்சியில் தற்போது 50 நிரந்தர துப்புரவு பணியாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வரும் நிலையில் இந்நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறைகள் உத்திரவு ந.க.எண்: 2255/எச்1/2019, நாள்: 29.11.2019-ன் படி திடக்கழிவு மேலாண்மை பணிக்கு இந்நகராட்சிக்கு வெளிப்பணி ஒப்படைப்பு முறையில் 63 துப்புரவு பணியாளர்களை M/s Relyon Facility Services private Ltd, Chennai நிறுவனத்திடமிருந்து பெற்று துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது.

வெளிப்பணி ஒப்படைப்பு முறை 30.09.2022 ஆம் தேதியுடன் ஒப்பந்தகாலம் முடிவடைகிறது. மேலும், ஒரு மாதத்திற்கு அதாவது 01.10.2022 முதல் 31.10.2022 வரை காலநீட்டிப்பு செய்வதற்கும், M/s Relyon Facility Services private Ltd, Chennai அவர்களுக்கு பணி ஆணை வழங்கவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.10.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்ற அனுமதிக்கலாம்.
2. நகர்மன்ற அனுமதி பெற்று பணி மேற்கொண்டமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

**<u>மன்றத்தீர்மான எண் : 110</u>** அனுமதிக்கப்பட்டது (ந.க.எண்:2255/2015/எச்1)

**பொருள் எண்: 7**

பவானி நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள வணிகவளாக கடை எண் 13 ன் குத்தகைதாரர் திரு.ஆர்.பி.பரணிதரன் த/பெ பச்சையப்பன் அவர்கள் மூன்றாண்டு குத்தகைகாலம் 30.09.2022 உடன் முடிவடைவதால் மேலும் மூன்றாண்டுகளுக்கு (இரண்டாம் முறை) குத்தகை உரிமம் புதுப்பித்து தரகோரி மனு கொடுத்துள்ளார். ஏற்கனவே உள்ள மாத வாடகைத் தொகையிலிருந்து 15 % சதவீதம் வாடகை உயர்வு செய்து 01.10.2022 முதல் 30.09.2025 வரை மேலும் மூன்றாண்டுகளுக்கு புதுப்பித்து கீழ்கண்ட விபரப்படி அதில் 9 மாத வித்தியாச தொகையினை முன்வைப்புத் தொகையாக செலுத்தப்பட வேண்டும் எனபதை தெரிவித்து புதுப்பித்து வழங்க மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| கடை எண் | வரிவிதிப்பு எண் | குத்தகைதாரர் பெயர் | பழைய வாடகை ரூ. | 15 % உயர்வு | புதிய வாடகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 13 | 055/BD01/00017 | திரு.ஆர்.பி.பரணிதரன் | 1850.00 | 278.00 | 2128.00 |

**அலுவலக குறிப்பு.**

மன்றம்அனுமதிக்கலாம்.

**<u>மன்றத்தீர்மான எண் : 111</u>** அனுமதிக்கப்பட்டது (ந.க.எண்.1140/2022/அ2)

**பொருள் எண்: 8**

இந்நகராட்சிக்கு சொந்தமான ஒன்பதாண்டு மற்றும் மூன்றாண்டு குத்தகையினங்களுக்கு 25.08.2022 ம் தேதியன்று நடைபெற்ற ஒப்பந்தபுள்ளி மற்றும் பொது ஏல விபரம் கீழ்கண்டவாறு மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | குத்தகையினம் | பொது ஏலத்தில் கோரப்பட்ட நபர்கள் மற்றும் உயர்ந்தபட்ச ஏலத் தொகை ரூ. | ஒப்பந்த புள்ளி பெறப்பட்ட விபரம் |
|---|---|---|---|
| 1 | புதிய பேருந்து நிலையக் கடை எண் 29 | திரு.தீபக் த/பெ மாதேஸ்வரன்<br>155-குப்பிச்சிபாளையம்<br>கேசரிமங்கலம் அஞ்சல். பவானி.<br>ஏலத் தொகை ரூ.8700/- | ஒப்பந்த புள்ளி ஏதும் பெறப்படவில்லை |
| | | திரு.நித்தியானந்தன் த/பெ திருவேங்கடம்<br>181-காமராஜர் வீதி<br>குப்பிச்சிபாளையம். பவானி.<br>ஏலத் தொகை ரூ.8500/- | ஒப்பந்த புள்ளி ஏதும் பெறப்படவில்லை |

**அலுவலக குறிப்பு.**

1. புதியபேருந்து நிலைய கடைஎண் 29 ற்கு உயர்ந்த பட்ச ஏலத்தொகை கோரியுள்ள திரு.தீபக் த/பெ மாதேஸ்வரன் என்பவரின் மாதம் ஒன்றிற்கு வாடகைத் தொகை ரூ.8700/- அரசாங்க மதிப்பை காட்டிலும் சராசரி மதிப்பை காட்டிலும் அதிகமாக உள்ளதால் உறுதி செய்யலாம்.
2. மன்றம் அனுமதிக்கலாம்

**<u>மன்றத்தீர்மான எண் : 112</u>** அனுமதிக்கப்பட்டது (ந.க.எண்.1450/2022/அ1)

**பொருள் எண்: 9**

வார்டு எண்.4இல் அமைந்துள்ள உரக்கிடங்கில் 1.91 ஏக்கரில் மரக்கன்றுகள் நடுதல் (859 எண்ணிக்கை) பணிக்கு மதிப்பீடு 2.48 இலட்சத்திற்கு நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி நாள்.05.09.2022 அளித்துள்ளதின் பேரில் 15.09.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் / குறைவு |
|---|---|---|---|
| 1 | திரு.எம். அப்புசாமி, ஒப்பந்ததாரர் | 2.48 | 0.10 % மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு |
| 2 | திரு. R.N. & Co, ஒப்பந்ததாரர் | | 1.55 % மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக, மதிப்பீட்டை விட 0.10 % சதவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எம். அப்புசாமி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>மன்றத்தீர்மான எண் : 113</u>** அனுமதிக்கப்பட்டது (ந.க.எண்.1111/2022/இ1)

**பொருள் எண்: 10**

வார்டு எண். 8 சோமசுந்தரபுரம் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்ட இடத்தில் முள்வேலி மற்றும் கேட் அமைத்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.1.00 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண்.102, நாள். 24.08.2022 அனுமதி அளித்துள்ளதின் பேரில் 06.09.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் / குறைவு |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு.பி.லோகநாதன், ஒப்பந்ததாரர் | ரூ.1.00 | 0.05 % மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு |
| 2 | திரு. எஸ். பாலசுப்ரமணியன், பவானி | | 1.10 % மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக, மதிப்பீட்டை விட 0.05 % சதவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.பி.லோகநாதன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**மன்றத்தீர்மான எண் : 114** அனுமதிக்கப்பட்டது (ந.க.எண்.303/2022/இ1)

**பொருள் எண்: 11**

பவானி நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 125KVA ஜெனரேட்டர் எரிபொருள் (டீசல் + ஆயில்) உபயோகத்திற்கு செலுத்த 2022-23 ஆம் ஆண்டிற்கான உத்தேச செலவினம் ரூ.4.00 இலட்சம் ஆகும். மேற்கண்ட செலவினத்தை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1.மன்றம் அனுமதிக்கலாம்

2.இதற்காகும் செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**மன்றத்தீர்மான எண் : 115** அனுமதிக்கப்பட்டது (ந.க.எண்.427/2020/இ1)

**பொருள் எண்: 12**

பவானி நகராட்சிக்கு சொந்தமான நகராட்சி அலுவலகத்தில் உள்ள 15 KVA ஜெனரேட்டர் எரிபொருள்(டீசல் +ஆயில்) உபயோகத்திற்கு 2022-23 ஆம் ஆண்டிற்கான உத்தேச செலவினத் தொகை ரூ. 100000/- ஆகும். மேற்கண்ட செலவினத்தை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இதற்காகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

**மன்றத்தீர்மான எண் : 116** அனுமதிக்கப்பட்டது (ந.க.எண். 428/2020/இ1)

**பொருள் எண்: 13**

இந்நகராட்சியில் இயங்கி வரும் ஈப்பு வாகன எண்கள். TN 36 BV 6693, TN 36 AY 6791 மற்றும் TN 36 AY 6793 ஆகிய வாகனங்களுக்கு 2022-2023 ஆம் ஆண்டிற்கு டீசல் மற்றும் ஆயில் உபயோகத்திற்கு உத்தேச செலவினம் ரூ.3.00 இலட்சம் ஆகும் மேற்கண்ட செலவினத்தை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இதற்காகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

**மன்றத்தீர்மான எண் : 117** அனுமதிக்கப்பட்டது (ந.க.எண். 739/2021/இ1)

**பொருள் எண்: 14**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 4 சின்னப்பா லேஅவுட் பகுதிகளில் மழைநீர் வடிகால் இல்லாமல் உள்ளது. இதனால் பொதுமக்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாவதால் அவ்விடத்தில் மழைநீர் வடிகால் கட்ட ரூ.4.00 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்

**மன்றத்தீர்மான எண் : 118** அனுமதிக்கப்பட்டது (ந.க.எண். 1168/2022/இ1)

**பொருள் எண்: 15**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 18 மண்தொழிலாளர் முதல் வீதி கடைசியில் அம்மன் நகரில் உள்ள வாம்பே கழிப்பிடம் மிகவும் பழுதடைந்து உள்ளது. கழிப்பிடத்தின் கதவுகள், தண்ணீர் தொட்டி போன்றவற்றை சரி செய்து கொடுக்க ரூ.3.00 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்

**<u>மன்றத்தீர்மான எண் : 119</u>** அனுமதிக்கப்பட்டது (ந.க.எண். 1169/2022/இ1)

**பொருள் எண்: 16**

வார்டு எண்.27 காவேரி வீதி நகராட்சி நடுநிலைப்பள்ளி கழிப்பறைகள் மற்றும் பள்ளிகளில் மராமத்து பணிக்கு மதிப்பீடு 3.00 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண். 77, நாள்.27.07.2022 அனுமதி அளித்துள்ளதின் பேரில் 20.09.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் / குறைவு |
|---|---|---|---|
| 1 | திரு.பி.லோகநாதன், ஒப்பந்ததாரர் | 3.00 | 0.07 % மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு |
| 2 | திரு. எஸ். பாலசுப்ரமணியன், பவானி | | 1.98 % மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக, மதிப்பீட்டை விட 0.07 % சதவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.பி.லோகநாதன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**<u>மன்றத்தீர்மான எண் : 120</u>** அனுமதிக்கப்பட்டது (ந.க.எண்.947/2022/இ1)

**பொருள் எண்: 17**

வார்டு எண். 12 அந்தியூர் மேட்டூர் ரோடு பிரிவில் புதிதாக கட்டப்பட்டுள்ள சுகாதார பிரிவு இருப்பு அறைக்கு கூடுதல் அபிவிருத்தி பணிகள் மற்றும் மின்சார வசதிகள் செய்தல் பணிக்கு மதிப்பீடு 2.00 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண்.74, நாள்.27.07.2022 அனுமதி அளித்துள்ளதின் பேரில் 20.09.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் / குறைவு |
|---|---|---|---|
| 1 | ஸ்ரீ பெரியாண்டிச்சி அம்மன் கன்ஸ்ட்ரக்சன், பவானி | 2.00 | 0.12 % மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு |
| 2 | பி. பார்த்தசாரதி இன்ஜினியரிங் காண்ட்ராக்டர்ஸ்,கோயம்புத்தூர் | | 1.50 % மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக, மதிப்பீட்டை விட 0.12 % சதவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஸ்ரீ பெரியாண்டிச்சி அம்மன் கன்ஸ்ட்ரக்சன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**<u>மன்றத்தீர்மான எண் : 121</u>** அனுமதிக்கப்பட்டது (ந.க.எண்.945/2022/இ1)

**பொருள் எண்: 18**

ஈரோடு மாவட்டம் பவானி நகராட்சியின் மாண்புமிகு தமிழக முதல்வர் சிறு குறு நடுத்தர நிறுவனங்கள் நிகழ்ச்சி மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சிகளுக்கு வருகை புரிந்த மாண்புமிகு தமிழக முதல்வர் வருக வருக என வரவேற்கும் விளம்பரத்தினை தினகரன் நாளிதழில் வெளியிட்டமைக்கு பட்டியல்

தொகை ரூ.20,400/- வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட நிறுவனத்திற்கு பட்டியல் தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்

2. இதற்காகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

**<u>மன்றத்தீர்மான எண் : 122</u>** அனுமதிக்கப்பட்டது (ந.க.எண். 425/2022/இ1)

**பொருள் எண்: 19**

பவானி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவிற்கு 90 வேலை நாட்களுக்கு வீடுவீடாக சென்று கொசுப்புழு மருந்து தெளிப்பு பணி, கொசு உற்பத்தியாகும் இடங்களை அழித்தல் மற்றும் முதிர்ந்த கொசுக்களை கட்டுப்படுத்த புகை மருந்து தெளிக்கும் பணிகளை மேற்கொள்ள வேண்டி இருப்பதால் அதற்கான கொசுப்புழு தடுப்பு பணியாளர்கள் (Domestic Breeding Checkers) கொண்டு தடுப்பு பணிகளை மேற்கொள்ள நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று 09.09.2022-ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்த புள்ளி விலை விகிதம் (ஒருமணி நேரத்திற்கு நபர் ஒருவருக்கான விலைவிகிதம்) |
|---|---|---|
| 1 | M/s. RK CONTRACTORS, 109/91 JKK NATRAJA NAGAR, KOMARAPALAYAM, NAMAKKAL 638183 | ரூ.74 /– |
| 2 | M/S GSC TECHNOLOGIES AND SERVICES 39 D-D RT COMPLEX, PALLIPALAYAM ROAD, KOMARAPALAYAM – 638 183. | ரூ. 78/– |

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1.வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் குறிப்பிடப்பட்டுள்ள M/s. RK CONTRACTORS,109/91 JKK NATRAJA NAGAR, KOMARAPALAYAM, NAMAKKAL Trustus Outsourcing Solutions Pvt Ltd, No: 117, 28'th Street, Balaji nagar, Chennai - 600 091 அவர்களின் ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் குறைவாக உள்ளதை மன்றம் ஏற்கலாம்.
2.தொற்று நோய்தடுப்புப் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்ற மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி குறைவான ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் வழங்கிய M/s. RK CONTRACTORS, 109/91 JKK NATRAJA NAGAR, KOMARAPALAYAM, NAMAKKAL அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.
3.இதற்காகும் உத்தேச செலவினம் ரூ.10.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>மன்றத்தீர்மான எண் : 123</u>** அனுமதிக்கப்பட்டது (ந.க.எண்.863/2021/எச்1)

(ஒம்).E,சிந்தூரி.

தலைவர்,

பவானி நகராட்சி.

/உண்மைநகல்/

ஆணையாளர்

பவானி நகராட்சி.